**கவனிக்க.-** 2010.05.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) மற்றும் பகுதி I : தொகுதி (III) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1654 - 2010 මැයි මස 14 වැනි සිකුරාදා - 2010.05.14**

*1654 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 619 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, மே மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, மே மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II இல் காணப்படும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் கால்நடை உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் கால்நடை உத்தியோகத்தர்கள் போன்ற பதவிகளில் 2010.06.30 ஆந் திகதியன்று நிலவுகின்ற வெற்றிடங்களினை நிரப்பும் பொருட்டு தகைமையுடையோரை தெரிவுசெய்யும் பொருட்டு உரிய தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இயைய ஏ4 கடதாசியின் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1 முதல் 7 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு இரு பக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2010.05.31 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை தட்டெழுத்தின் மூலம் தயாரித்துக்கொள்ள முடியும். ஆயினும் அவ்வாறு தயாரித்த விண்ணப்பப்படிவத்தினை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய அமையாத விண்ணப்பங்களும் மற்றும் பூரணமான முறையில் தகவல்களை குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் விண்ணப்பதாரரே சரிபார்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் அவ்விண்ணப்பப் பத்திரத்தின் ஒளிப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வதானது பயனுடையதாக அமையும். பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கொழும்பில் நடாத்தப்படும். நீங்கள் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலத்தை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடவும்.

இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

**குறிப்பு**.- (I) ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் மாத்திரமே ஆட்சேர்ப்புச் செய்யப்படும். கால்நடை உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 50% திறந்த போட்டிப் பரீட்சை மூலமாகவும், மீதமான 50% வீதமும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் ஊடாகவும் மேற்கொள்ளப்படும். கால்நடை உத்தியோகத்தர் பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் ஊடாக நியமிக்கும் பொருட்டு ஒதுக்கிடப்பட்டுள்ள 50% வீதத்திற்கு அமைய நியமிக்க இயலாது போகும் சந்தர்ப்பத்தில் மீதப்படுத்தப்படுகின்ற வெற்றிட எண்ணிக்கை திறந்த போட்டிப் பரீட்சையினூடாக நிரப்பப்படும்.

(II) விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் ஏதும் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எத்தகைய முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி வரை விண்ணப்பத்தினை தாமதப்படுத்துவதால் ஏற்படும் நஷ்டங்களுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவர். விண்ணப்பம் உள்ளிட்டு அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்/கால்நடை உத்தியோகத்தர் பதவி" எனும் சொற்றொடர் எழுதப்படல் வேண்டும் (தாம் விண்ணப்பம் செய்யும் பதவியினை மாத்திரம் குறிப்பிடுதல் வேண்டும்).

(III) அடிப்படை தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(IV) ஆட்சேர்ப்பு செய்யப்படும் கால்நடை உத்தியோகத்தர்கள் நியமனம் பெறும் திகதி முதல் 5 வருடங்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றுதல் வேண்டும்.

2. **பணிக்கமர்த்துவதற்கான சேவை நியதிகளும் நிபந்தனைகளும்**.- (I) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தெரிவுசெய்யப்படுவோர் விதவை/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(II) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அவர்களால் விண்ணப்பிக்கப்படுகின்ற இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவி ஒன்றினை நிரப்பும் பொருட்டு நியமனம் செய்யப்படுவர்.

(III) ஏனைய சேவை நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும் 1980.10.31 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமான பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பிரமாணம் மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தப்பட்ட நியதிகள் ;

அத்துடன்

இலங்கை அரசின் தாபனவிதிக் கோவையின் ஒழுங்குவிதிகள் இலக்கம் 1589/ 30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள் மற்றும் அவ்வப்போது அரசினால் வெளியிடப்படும் பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமையவுமாகும்.

3. **சம்பளத்திட்டம்**.- இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தின் பதவிகளின் பொருட்டு பொ. நி. சு. இலக்கம் 6/2006 இற்கு அமைய SL-I- 2006 சம்பள அளவுத்திட்டம் (அதாவது ரூபா 22,935-10×645-8×790 - 17×1,050 - ரூபா 53,555) சம்பளத்திட்டம் ஆகும். படிநிலை 1 முதல் 11 வரை உரித்தாகுவதுடன், அச்சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும். இச்சம்பளத் திட்டத்தில் 4 ஆவது படிமுறையினை அடைவதற்கு முன் முதலாவது வினைத்திறமைக்காண் தடைப் பரீட்சையிலும், 7 ஆவது படிமுறையினை அடைவதற்கு முன் இரண்டாவது வினைத்திறமைக்காண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுவான தகைமைகள்.-** (அ) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 20 இற்கு குறையாமலும் வயது 35 இனை விஞ்சிடாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) முதுமானிப் பட்டம் பெற்றுள்ள விண்ணப்பதாரர் தொடர்பில் உச்ச வயதெல்லை 40 ஆகும்.

(ஈ) சிறந்த குணவியல்பும் தேகாரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும். உடற்றகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமையின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு இச்வுச்ச வயது எல்லை ஏற்புடையதாகாது.

**5. திறந்த போட்டிப் பரீட்சையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் :**

(I) ***ஆராய்ச்சி உத்தியோகத்தர் :***
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கால்நடை வளர்ப்பு விஞ்ஞானம்/மிருக வைத்திய விஞ்ஞானம்/ விவசாயம் தொடர்பான நான்கு வருட பட்டப்படிப்பு 1 ஆம் வகுப்பு அல்லது 2 ஆம் வகுப்பில் உயர் மட்டத்தில் சித்தி பெற்றிருத்தல் அல்லது சாதாரண வகுப்பு பட்டத்துடன் அத்துறையில் பட்டப்பின் படிப்பு

(II) ***கால்நடை உத்தியோகத்தர் :***
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானம்/கால்நடை வளர்ப்பு விஞ்ஞானம்/ விவசாயம் சம்பந்தமான நான்கு வருட பட்டப்படிப்பு.

**குறிப்பு.-** (i) திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அடிப்படைக் கல்வித் தகைமையாகக் கருதப்படும் பட்டப்படிப்பு சம்பந்தமான முழுமையான தகைமையை பெற்றிருக்க வேண்டும். அதாவது இதன் பொருட்டு பட்டப்படிப்பு சான்றிதழ் வழங்கிய திகதியானது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னராகவோ இருத்தல் வேண்டும்.

(ii) பெறுபேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**6. திறந்த போட்டிப் பரீட்சையின்கீழ் ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை.-** (அ) ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் கால்நடை உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் இணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்கு அமைய பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் பரீட்சை ஒன்றிற்கு அமர்தல் வேண்டும். விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் அனைத்து பதவிகளின் பொருட்டும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும். ''ஆராய்ச்சி உத்தியோகத்தர்'' மற்றும் ''கால்நடை உத்தியோகத்தர்'' போன்ற பதவிகள் இரண்டிற்கும் விண்ணப்பிப்பதாயின் பரீட்சைக் கட்டணமாக ரூபா 350 இனையும் ஒரு பதவிக்கு மாத்திரம் விண்ணப்பிப்பதாயின் பரீட்சைக் கட்டணமாக ரூபா 300 இனை பேராதனை தபாற் பணிமனையில் மாற்றக்கூடியவாறு எந்தவொரு தபாற்கந்தோரிலும் செலுத்தி கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிட்டு பெறப்பட்ட காசுக் கட்டளையினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்பவும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் உரிய தகைமையினைக் கொண்டிருப்பின் அவர் ''ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் கால்நடை உத்தியோகத்தர்'' போன்ற இரண்டின் பொருட்டும் ஒரே விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம்.

(இ) பொது வினாப்பத்திரம் மற்றும் விடயம் தொடர்பான வினாப்பத்திரம் என்பவற்றில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையினை நிரையிடப்பட்டு மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வெற்றிடங்களினை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு எத்தகைய புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளின் பொருட்டு விண்ணப்பிக்கின்ற அனைத்து விண்ணப்பதாரரும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடங்கிய பரீட்சை ஒன்றில் அமர்தல் வேண்டும். அது பின்வருமாறு இரண்டு பகுதிகளினைக் கொண்டு அமைந்துள்ளன :-

(அ) பொது வினாப்பத்திரம் (முதலாவது பகுதி) - பாட இலக்கம் 1, விவேகப் பரீட்சை (காலம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) ;

இது விண்ணப்பதாரரது விவாதிக்கும் திறன் மற்றும் ஆய்வு செய்யும் முறைமை தொடர்பில் பலதரப்பட்ட வினாக்களைக் கொண்டமைந்ததாகும்.

(ஆ) பொது வினாப்பத்திரம் (இரண்டாவது பகுதி) - பாட இலக்கம் 2, பொது அறிவு (காலம் : 1 1/2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) ;

இலங்கையின் அரசியல், சமூக கலாசாரம், பொருளாதார சூழல் சம்பந்தமானதும் உள்ளூர், வெளியூர் தற்போதைய நிலவரம் மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், அபிவிருத்தி சம்பந்தமான அறிவைப் பரீட்சிக்கும் முறையில் அமைந்த வினாப்பத்திரம் ;

(இ) மேற்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் மேற்குறிப்பிடப்பட்ட பொது வினாப்பத்திரத் திற்கும் மேலாக தாங்கள் விண்ணப்பிக்கும் பதவி அல்லது பதவிகளுக்கு பொருத்தமான துறையில் அறிவு மற்றும் இயலுமையை பரீட்சித்தலினை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விடயம் சம்பந்தமான வினாப்பத்திரம்/ வினாப்பத்திரங்களுக்கு தோற்ற வேண்டும். இந்த வினாப்பத்திரத்தின் பொருட்டு (காலம் : 1 1/2 மணித்தியாலம் - 200 புள்ளிகள்).

7. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்தல்.- கால்நடை உத்தியோகத்தர் பதவியில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 50% மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் மூலம் நிரப்பப்படும்.

7.1 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின்கீழ் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்.- கால்நடை வளர்ப்பு/இரு வருட விவசாய டிப்ளோமாவுடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் தற்போது சேவையில் உள்ள கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர்/ ஆராய்ச்சி உதவியாளர் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் ஒருவராக இருத்தல் அல்லது இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர்

சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் ஒருவராகவோ அல்லது இலங்கை தொழில்நுட்ப சேவையில் விசேட வகுப்பில் அல்லது I ஆம் வகுப்பில் 4 வருடம் திருப்திகரமான சேவையை பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல் ;

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கால்நடை வளர்ப்பு விஞ்ஞானத்தில் அல்லது விவசாய தொடர்பில் நான்கு வருட பட்டப்படிப்புடன் 5 வருட சேவைக்காலம் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர்/ ஆராய்ச்சி உதவியாளர்/ மாகாண அரச சேவையில் உள்ள கால்நடை அபிவிருத்தி ஆலோசகராக இருத்தல் ;

**குறிப்பு**.- அது எவ்வாறாயினும் கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள கால்நடை உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறையின்கீழ் விண்ணப்பிக்க இயலும் :

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் இரண்டு வருட ஆய்வுகூட சான்றிதழுடன் இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு மற்றும்/அல்லது விசேட வகுப்பில் நான்கு வருட திருப்திகரமான சேவைக்காலத்தை நிறைவுசெய்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் சேவையில் உள்ள ஆய்வு உதவியாளர் ஒருவராக இருத்தல்.

7.2 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின்கீழ் ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை.- (அ) மேலே 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள பொது வினாப்பத்திரத்திற்கும் மற்றும் கால்நடை உத்தியோகத்தர் பொருட்டு விடயம் தொடர்பான வினாப்பத்திரத்திற்கும் விடையளிக்க வேண்டும்.

(ஆ) பொது வினாப்பத்திரத்திற்கும் விடய வினாப்பத்திரத்திற்கும் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வெற்றிடங்களினை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய முறையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரர் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை கொண்டிருப்பவர்களாயின் பதவியின் பொருட்டு விண்ணப்பிக்கும் முறையை விண்ணப்பத்தில் சரியாக குறிப்பிட்டு ஒரு விண்ணப்பத்தின் மூலம் திறந்த மற்றும் மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் இரண்டிற்கும் விண்ணப்பிக்க இயலும்.

8. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது கீழ்க்காணும் ஆவணங்களின் மூலப்பிரதிகளினை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ii) பட்டம் மற்றும்/ அல்லது உயர் தகைமைகளைக் கொண்ட கல்விச் சான்றிதழ்கள் ;

(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ் இரண்டு. அதில் ஒன்று பாடநெறி தொடர்பான பணிப்பாளரிடம் இருந்து, பல்கலைக்கழகத்தின் பேராசிரியரிடம் இருந்து, அல்லது விரிவுரையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும். (தற்போதைக்கு இத்திணைக்களத்தில் சேவையில் உள்ளோர் தொடர்பில் இச்சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டியதில்லை) ;

(iv) சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சித்தியடைந்துள்ள உதிஉயர் பரீட்சைகளினது சான்றிதழ்கள் ;

**9. ஏனைய ஒழுங்குவிதிகள் :**

(i) இவ்வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில், ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்படாத விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரித்தாகும்.

(ii) வெற்றிடங்களினை நிரப்புதல், நிரப்பாமல் விடுதல் அல்லது ஒரு பகுதியினை மாத்திரம் நிரப்புதல் போன்ற விடயத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கே உரியதாகும்.

(iii) இவ்வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மத்தியில் ஏதும் வேறுபாடு நிலவுமேயாயின் இங்கு சிங்கள மொழி மூலத்தினையே இறுதித் தீர்வாக கொள்ளல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரர் எவராயினும் ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(v) விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் உண்மைக்கு புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டிருப்பது தெரியவரின் அல்லது ஏதாவது முக்கிய தகவல் ஒன்றினை அவர் வேண்டும் என்றே மறைத்து இருப்பாரேயாயின் அவர் சேவையில் நின்றும் நீக்கப்பட இடமுண்டு.

(vi) விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப் பட்டவுடனே அது பற்றி பத்திரிகை விளம்பரம் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். விளம்பரம் செய்யப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றதும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப் பட்டதற்கு அமைய அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி, பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளியே ஆயின் அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கத்தை குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத்தருவது சாலவும் சிறந்ததாகும்.

(vii) விண்ணப்பதாரரால் தமது ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளருக்கு நிரூபிக்கப்பட வேண்டியதுடன் அது தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமாகும்.

(viii) விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையைக் கொண்டுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக கருத்திற் கொள்ளக்கூடாது.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு விண்ணப்பதாரர் உறுதிப்படுத்தப்படுவர். அவ்வொழுங்கு விதிகளை மீறுகையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுத்தப்படுவர்.

சுனிமல் சேனாரத்ன,
செயலாளர்,
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு,
இல. 45, சாந்த மைக்கல் வீதி,
கொழும்பு 03.
2010.07.04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் கால்நடை உத்தியோகத்தர்கள் பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**

Application for the Open/ Limited recruitment of officers in the post of Research Officer/Livestock Officer in Class II Grade II in the Sri Lanka Animal Production & Health Service

[ ]
(அலுவலக பயன்பாட்டிற்காக)

எழுத்துமூல பரீட்சைக்குத்
தோற்ற விரும்பும்மொழிமூலம் :

சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

[ ]
(உரிய இலக்கத்தை கூட்டில் இடவும்.)

பதவியின் பொருட்டு விண்ணப்பிக்கும் முறை :

ஆராய்ச்சி உத்தியோகத்தர் (திறந்த) - 1
கால்நடை உத்தியோகத்தர் (திறந்த) - 2
கால்நடை உத்தியோகத்தர் (மட்டுப்படுத்தப்பட்ட) - 3
மேலே பதவிகள் 1 உம் 2 உம் - 4
மேலே பதவிகள் 2 உம் 3 உம் - 5
மேலே பதவிகள் 1 உம் 3 உம் - 6
மேலே பதவிகள் 1, 2 மற்றும் 3 - 7

[ ]
(உரிய இலக்கத்தை கூட்டில் இடவும்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :----.

ஆங்கிலத்தில் (தனிப் பேரெழுத்துக்களால்) :-

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர், ஆங்கிலத்தில் (தனிப் பேரெழுத்துக்களால்)

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

3. தபால் முகவரி :----.
(முகவரியில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கவும்).

4. நிரந்தர வதிவிடத்திற்குரிய-

(i) மாகாண சபை :----.
(ii) மாவட்டம் :----.

5. பிறந்த திகதி :----.

வருடம்: [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :-

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

6. (அ) நீர் இலங்கைப் பிரசையா ? :----.
(ஆ) இனம் (சிங்களம்/இலங்கைத் தமிழ்/இந்தியத் தமிழ்/முஸ்லிம்/ஏனைய) :----.

7. (அ) பால் : ஆண் - 1
பெண் - 0

[ ]
(உரிய இலக்கத்தை கூட்டில் இடவும்)

(ஆ) விவாகமானவர்/விவாகமாகாதவர்/விவாகரத்தானவர் :

விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
விவாகரத்துப் பெற்றவர் - 3

[ ]
(உரிய இலக்கத்தை கூட்டில் இடவும்)

8. கல்வித் தகைமைகள் :-

| பட்டம்/ பட்டப்பின் படிப்பு | வகுப்பு | பல்கலைக்கழகம் | வருடம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

9. அறிவுறுத்தலில் 7 ஆம் பந்தியின்கீழ் தகைமைபெறும் உத்தியோகத்தர்களினால் மாத்திரம் நிரப்பப்படல் வேண்டும் :-

(i) விவசாயம்/ கால்நடை வளர்ப்பு டிப்ளோமா தொடர்பான விபரம் :----.

10. சேவை விபரம் :----.

| தற்போதைய பதவி | சேவைக்காலம் | | சேவை நிலையம் | மாவட்டம்/ மாகாணம் |
|---|---|---|---|---|
| | முதல் | வரை | | |
| 1.<br>2.<br>3. | | | | |

11. நீர் ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் தெரிவுசெய்கையில் கவனிக்க வேண்டிய முன்னுரிமை அடிப்படையில் நிரல்படுத்துக.

(i) :----.

(ii) :----.

13. இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என்பதை இங்கு உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவுசெய்ததன் பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளியாகவில்லை என்பதை எனது வழமையான கையொப்பத்தை இட்டு இத்தால் உறுதிமொழிகின்றேன்.

மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பான பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் நான் ஆளாகுவேன் என்பதை உறுதிமொழிகின்றேன்.

இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளையின் விபரம் (கழறாதவாறு ஒட்டிவிடவும்) :----.

காசுக்கட்டளை இலக்கம் :----.
திகதி :----.
தபால் பணிமனை :----.

----,
திகதி : விண்ணப்பகாரரது கையொப்பம்.

**திணைக்களத் தலைவரது சான்றிதழ் :**

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ------- ----------------- ------------------------இத்திணைக்களத்தில் / மாகாண சபையில் ------------------------ எனும் பதவியில் உள்ளவர் எனவும், விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் அவரது தனியார் கோவைக்கு அமைவாக உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவியின் நிமித்தம் இவ்வுத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் இத்திணைக்களத்தில் இருந்து/இம்மாகாண அரச சேவையில் இருந்து விடுவிப்பு செய்ய முடியும்/முடியாது என்பதை அறியத்தருகின்றேன். (பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும்.)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

முகவரி :----.
திகதி :----.

இணைப்பு I

**இலங்கை கால்நடை சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் கால்நடை உத்தியோகத்தர்கள் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம்**

பொது வினாப்பத்திரம் முதலாவது பகுதி - பாட இலக்கம் 1, விவேகப் பரீட்சை

இது விண்ணப்பதாரரது விவாதிக்கும் திறன் மற்றும் ஆய்வு செய்யும் முறைமை தொடர்பில் பலதரப்பட்ட வினாக்களைக் கொண்டமைந்ததாகும்.

(காலம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

பொது வினாப்பத்திரம் இரண்டாம் பகுதி - பாட இலக்கம் 2, பொது அறிவு

இலங்கையின் அரசியல், சமூக கலாசாரம், பொருளாதாரம், சுற்றாடல், சம்பந்தமானதும், உள்ளூர், வெளியூர் தற்போதைய நிலவரம் மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், அபிவிருத்தி சம்பந்தமான அறிவைப் பரீட்சிக்கும் முறையில் அமைந்த வினாப்பத்திரம்

(காலம் : 1 1/2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

விடய விதான வினாப்பத்திரம் :

கீழே கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

(காலம் : 1 1/2மணித்தியாலம் - 200 புள்ளிகள்)

(I) ஆராய்ச்சி உத்தியோகத்தர் பொருட்டு விடயம் சம்பந்தமான வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு (பாட இலக்கம் 03) :

(1) விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு தொடர்பான அரச கொள்கை
(2) இலங்கையின் காலநிலை வலய விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு என்பவற்றின் தாக்கம்
(3) கால்நடை வளர்ப்புத் துறையின் கட்டமைப்பு, கால்நடை வளத் துறையில் தற்போதைய நிலை
(4) பயிர்-கால்நடை ஒருங்கிணைந்த திட்டம்
(5) கால்நடை வளத்துறைக்கு உரிய முக்கிய ஆய்வுத் தகவல்கள்
(6) ஆராய்ச்சி தகவல் தொடர்பாடல் முறை
(7) கால்நடை வளர்ப்பு மற்றும் சார்ந்த செயற்பாடுகளின் பொருளாதார இலாபம்
(8) இலங்கையில் ஆராய்ச்சிக் கொள்கை

(II) கால்நடை உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு விடயம் சம்பந்தமான வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு (பாட இலக்கம் 04) :

(1) * இலங்கையில் கால்நடை வளத்துறையில் உள்ள சிறப்பம்சங்கள், வெளிப்படும் விசேட அம்சங்கள், அபிவிருத்தி தேவைப்பாடு, வாய்ப்புக்களும் சவால்களும் ;

* கால்நடை வள உற்பத்தி, தயாரிப்பு, விற்பனை என்பன தொடர்பில் அத்துறையில் அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு அமையப் பெற்றுள்ள விதம் ;

(2) கிராமிய மற்றும் தேசிய பொருளாதாரத்தில் கால்நடை வளத்துறையின் முக்கியத்துவமும் அதன் தொடர்பும் ;

(3) இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் இருக்கும் வளங்களை திறனாக பயன்படுத்திக் கொள்வதும் பல்வேறு கால்நடை விசேடங்களின் பொருட்டு பயன்படுத்தக்கூடிய இன விருத்தி வழிமுறைமைகளினை இனங்காணல் ;

(4) பாரம்பரியமானதும் பாரம்பரியமற்றதுமான விலங்குணவில் கிடைக்கும் தன்மையும் அதன் எதிர்காலத் தேவைகளின் பொருட்டு மறுசீரமைப்புச் செய்யும் வழிமுறைகள் கால்நடைகளின் போசணைகளின் அவசியமும் அந்த விலங்கு வகைகளுக்கு ஏற்ப விலங்கு உணவு கலவை தயாரித்தல் ;

(5) கால்நடை வளர்ப்பு, விவசாயம், நன்னீர் மீன் வளர்ப்பு, வனஜீவிகள் மற்றும் பொது மக்களுக்கான மிருக வைத்திய சேவை என்பன பொருட்டு முக்கியம் பெறும் கட்டளைகள், திருத்தச் சட்டங்கள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் அவற்றின் நோக்கங்களும் முக்கியத்துவமும் ;

(6) வெவ்வேறு பண்ணை உற்பத்தி முறைமைகள், கால்நடை வள உற்பத்தி பண்ணை திட்டமிடுதல், பண்ணையின் வரவு-செலவுத் திட்டத்தினை தயாரித்தல், பண்ணையில் பதிவேடுகளினை வைத்துக்கொள்ளல் மற்றும் விவசாய உற்பத்தி மற்றும் கால்நடை வளங்களிடையே இடம்பெறும் அந்நியோன்யமான பிணைப்பின் மூலம் உற்பத்தி திறனை மேம்படுத்தல் ;

(7) இலங்கையின் கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தொழில்நுட்ப அறிவினை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு விவசாய, விவசாய கால்நடை வளர்ப்பு விரிந்த சேவைகளின் அணுகுமுறை மற்றும் முறைமைகள் ;

(8) உலகமயமாதல் தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமை மற்றும் இலங்கையின் கால்நடை வளத்துறையில் அவற்றின் முக்கியத்துவமும் தாக்கமும் ;

(9) கால்நடை வளத்துறையில் சர்வதேச வர்த்தகம், வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவமும் தாக்கமும் ;

(10) கால்நடை தொற்றுநோய் தடுப்பு உபாயங்கள், கால்நடை ஏற்றுமதி இறக்குமதி மற்றும் கால்நடை உற்பத்திகள் தொடர்பில் கால்நடை தொற்றுநோய் தடுப்பு முறைமையில் உள்ள முக்கியத்துவம் ;

பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். தகைமை இருப்பின் இரு பதவிகளுக்கும் உரிய பரீட்சையின் பொருட்டு தோற்றமுடியும்.

5-196

## திருத்தம்

### பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு

பதிவாளர் சேவையின் III ஆம் தர பதவிகட்கு ஆட்சேர்த்தல் போட்டிப் பரீட்சை - 2009

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 2010.01.01 ஆந் திகதிய 1635 ஆம் இலக்க வர்த்தமானியின் ஆங்கில மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 14 ஆம் இலக்க 11 ஆம் பிரிவில் விடயம் மற்றும் விடய விதந்துரையின்கீழ் விடய இல. 2, Intelligence என்பது Aptitude எனவும், தமிழ்மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 14 ஆம் இலக்க 11 ஆம் பிரிவில் விடயம் மற்றும் விடய விதந்துரையின்கீழ், விடய இல. (i) இன்கீழ் மொழியும் ஆற்றலும் (சிங்களம்/தமிழ்) என்பது மொழியும் கட்டுரையும் (சிங்கள/தமிழ்) எனவும் திருத்தப்பட வேண்டும்.

பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

5-302

---

### அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2009

அரசாங்க சேவையில் கனிஷ்ட ஊழியர்களை அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரமுயர்த்தும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2010 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. மத்திய அரச சேவையைச் சார்ந்த கனிஷ்ட ஊழியர்களுக்காக இப்பரீட்சை பின்குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களும் நகர இலக்கங்களும் பின்குறிப்பிடப்படுகின்றன. போதியளவு பரீட்சார்த்திகள் தோற்றாதவிடத்து அல்லது ஏனைய காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்யுமிடத்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி பரீட்சை நிலையம் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும் :

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருணாகல் | 18 |
| அனுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இச்சட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவதற்கு நேரிடும்.

4. பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய மொழி மூலம் இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தமது விருப்பப்படி இதில் ஏதேனும் ஒரு மொழிமூலத்தில் மட்டும் இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

5. **சம்பளம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (iv) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி அரச முகாமை உதவியாளர் சேவையில் III, II மற்றும் I ஆகிய வகுப்புகளுக்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 13,990-10X145-11X170-6X240-14X320-23,230 ஆகும். ரூ. 15,440 ஐக் கடந்து செல்வதற்காக வகுப்பு 11 இற்கான தரமுயர்வும் ரூ. 17,310 ஐக் கடந்து செல்வதற்காக வகுப்பு I இற்கான தரமுயர்வும் பெறுதல் வேண்டும்.

**குறிப்பு**.- நியமனம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் நடைமுறைப் படுத்தப்படும் சம்பள அதிகரிப்பு சட்டதிட்டங்களுக்கு அமைய, அவர்களுக்கு சம்பள அதிகரிப்பு நலன்களும் வழங்கப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளுக்கு நியமனத் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு பதிற் கடமையாற்றும் அடிப்படையின்கீழ் நியமனங்கள் வழங்கப்படும். அவர்களின் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்த பின்னர் சேவையில் நிரந்தரப்படுத்தப்படும்.

(ii) இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனம் பெறும் பரீட்சார்த்திகள் இடமாற்றங்களுக்கும் இத்தீவின் எப்பகுதி யிலேனும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

(iii) நியமனம் கிடைக்கப்பெற்று 5 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன்படி இரண்டாவது அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

7. **நியமனத்தின் பொருட்டு தெரிவுசெய்யும் முறை**.- மத்திய அரசின் வெற்றிடங்களுக்காக மத்திய அரச சேவையிலுள்ள கனிஷ்ட ஊழியர்கள் மட்டும் போட்டிப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். பரீட்சைக்கான ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் நூற்றுக்கு நாற்பது வீதம் (40%) அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பதாரிகளை தெரிவுசெய்து, அவர்களின் மொத்தப் புள்ளிகளுக்கமைய திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படும்.

8. **தகைமைகள்**.- இப்பரீட்சையில் போட்டியிடுவதற்கு தகைமை பெறும் பொருட்டு ஒவ்வொரு பரீட்சார்த்திகளும் கொண்டிருக்கவேண்டிய தகைமைகள் :

(i) 2007.08.24 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 (iv) இன்படி பீஎல்-1-2006ஏ, பீஎல்-2-2006ஏ மற்றும் பீஎல்-3-2006ஏ என்னும் சம்பள குறிகளின் கீழ்வரும் சம்பள அளவுத்திட்டத்தை கொண்டுள்ளதும் நிரந்தரப் பதவியை வகிக்கும் மத்திய அரச சேவையின் கனிஷ்ட ஊழியராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்நியமனங்களில் உறுதிப்படுத்தியிருத்தலும் வேண்டும். (தாபன விதிக்கோவையின் அத்தியாயம் 1 இல் கூறப்பட்ட வரைவிலக்கணத்துக்குள் அடங்கும் அரசாங்க உத்தியோ கத்தராக இருத்தல் வேண்டும்.)

(ii) 2009.12.31 ஆந் திகதிக்கு உடன் முன்னராக நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 5 வருடகாலப் பகுதி தொடர்ச்சியாகவும், முனைப்பாகவும், திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன் அதனைப் பற்றி திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தி யிருத்தல் வேண்டும்.

(iii) 2001.11.26 ஆந் திகதிக்குப் பின்னர் சேவையில் நிரந்தரப்படுத்தியுள்ள பரீட்சார்த்திகள் கல்விப் பொதுத் தராதர (சா.த.) பரீட்சையில் மொழி/இலக்கியம் என்பவற்றுடன் எண்கணிதம்/ தூயகணிதம்/ ஆரம்ப கணிதம்/ வர்த்தக எண்கணிதம் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :

(1) ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சி பெறுவதற்கான கால எல்லையாக மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டு காலவெல்லையாக கணக்கிலிடப்பட மாட்டாது. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் சேவை யாற்றியுள்ள தற்காலிக/ அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான 5 ஆண்டு காலவெல்லைக்காக கணக்கிலிடப்படமாட்டாது.

(2) அரசாங்க சேவையிலுள்ள மோட்டார் வாகனச் சாரதியாளர்கள் ஏனைய தகைமைகளைக் கொண்டிருப்பின் அவர்களின் சம்பள முறையைப் பற்றி கவனத்தில் கொள்ளாது இப்பரீட்சைக்கு தோற்றலாம்.

(3) மேலே (ii) ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறான ஐந்தாண்டு (05) திருப்திகர சேவை பின்வரும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பின்வரும் தேவைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் இப்பரீட்சையின் செயற்பாடு களுக்காக திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ள வர்கள் எனக் கருதப்படுவர் :

(அ) 2009.12.31 ஆந் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து ஆண்டுகளில் (05) சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) 2009.12.31 ஆந் திகதிக்கு முன்னரான ஐந்து ஆண்டுகளில் (05) ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாது இருத்தல் வேண்டும்.

(4) நியமனத்தின் பொருட்டு விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுமிடத்து திணைக்களத் தலைவர் அவரை விடுவிக்க உடன்படுதல் வேண்டும்.

(5) பகுதி தொழில்நுட்பச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வர்களோ அல்லது ஏதேனுமொரு செயற்பாட்டிற்காக பயிற்றப்பட்டவர்களோ அல்லது அரசினால் விசேட முறையில் பயிற்சியளிக்கப்பட்ட எந்தத் தரத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் இப்பரீட்சைக்கு தோற்றுவ தற்கு தகைமை அற்றவர்களாக கருதப்படுவர். உதாரணமாக பொறியியல் மற்றும் தொழிற்சாலைத் தரங்களிலுள்ள ஊழியர்களும், சுகாதாரத் திணைக் களத்தின் மருத்துவிச்சிகளும் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர்களாவர். எவரேனுமொரு ஊழியர் தகைமையுடையவரா அல்லது தகைமையற்ற வரா என்பதில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் பரீட்சார்த்தி அவரின் திணைக்களத்தில் விசாரிக்க வேண்டுமென்பதுடன் குறித்த திணைக்களம் அது தொடர்பில் ''அரசாங்க நிர்வாக அமைச்சுடன்'' தொடர்புகொள்ள வேண்டும்.

இப்பரீட்சைக்காக தோற்றவுள்ள ஊழியரின் தகைமை பற்றி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சை உசாவும் வேளையில் சம்பந்தப்பட்ட திணைக்களம் சம்பள அளவுத்திட்டம் சகிதம் ஊழியரின் தொழில் தொடர்பான முன்னைய விபரங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அத்தொழிலைச் செய்வதற்கு வேண்டிய ஏதாவது பயிற்சி விண்ணப்பதாரிக்கு அளிக்கப்பட்டதா என்பதனையும் அந்தப் பயிற்சிக்கான கால எல்லை, அதன் தன்மை என்பவற்றையும் குறிப்பிட வேண்டும்.

(6) அரசாங்க சேவையின் தற்காலிக, அமைய ஊழியர்கள் சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அத்தகைய பிரிவுகளின் ஊழியர்கள், இந்தப் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவர்களாவர்.

(7) அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த இணைந்த சேவை, கனிஷ்ட ஊழியர்களைத் தவிர்ந்த திணைக்களத்தின் வேறு எந்த ஊழியர்களும் பரீட்சைக்கு தோற்ற தகுதியற்றவராவார்கள்.

(8) பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தாம் திருப்தியுறும் வகையில் இதில் விதிக்கப்பட்டுள்ள தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யாமல் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சையில் போதிய அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பினும், நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவர்.

9. **விண்ணப்பங்கள்** : (i) இப்பரீட்சைக்கு உட்சேர்வதற்கான விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் ஆரம்பம் தொடக்கம் 4.0 வரை முதலாவது பக்கத்திலும் மீதியை இரண்டாவது பக்கத்திலும் அடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டுமென்பதுடன் ஏற்புடைய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவுறாத மற்றும் முழுமை பெறாத தகவல்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவத்தை பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு பரீட்சார்த்தியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்தும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

(ii) பரீட்சைக் கட்டணம் 250 ரூபாவாகும். இப்பணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-20-13 என்ற வருமானத் தலைப்பின்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திற்கோ அல்லது மாவட்ட செயலகத்திற்கோ செலுத்துவதற்கு முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் பரீட்சார்த்திகளின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்பட்டு 2010.06.14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சென்றடையுமாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு தாம் சேவை புரியும் திணைக்களத் தலைவர் ஊடாக பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும்.

(iv) இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்துக்கமைய விண்ணப்பப் படிவத்தைத் தயார் செய்துகொள்ள வேண்டும் எனவும், விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியையோ அல்லது முற்பிரதியையோ அனுப்பலாகாது எனவும் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

10. விண்ணப்பப்படிவத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான ஒரு சான்றிதழ் திணைக்களத் தலைவர்களினால் வழங்கப்பட வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள்

நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். இந்த நடைமுறைக்கு இணங்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். 2010.06.14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு தமது விண்ணப்பத்தினை நேரகாலத்துடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

11. பரீட்சை ஆணையாளர் நாயகம் தாம் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசியின் பிரதி ஒன்றுடன் பிரவேச அட்டையையும் அனுப்புவார். அத்துடன் அவ்விபரங்கள் தொடர்பான அறிவித்தல் ஒன்றும் ''தினமின'', ''தினகரன்'', ''டெயிலி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய பிரவேச அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான பிரவேச அட்டைகளை காட்டத்தவறும் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டும் கொழும்பிற்கு வெளியிடமாயின் தமது அனுமதி அட்டை அனுப்பவேண்டிய பெக்ஸ் இலக்கமும் குறிப்பிட்ட உங்கள் கோரிக்கை கடிதமும் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

12. பரீட்சைக்கு தோற்ற அனுமதியளித்தல் தகவுத் திறமையை ஏற்றுக்கொண்டதென அமையாது. பின்னர் ஒரு கட்டத்தில் அது நுண்ணியதாக ஆராயப்படும். இப்பரீட்சையில் போட்டியிடுவதற்குத் தகுதியற்றவர் எனப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் ஒரு விண்ணப்பதாரரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது நிராகரிக்கப்படும்.

13. பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல்.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சையின் பெறுபேறுகள் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும்.

14. **ஆள் அடையாளம்**.- இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்திக்கமைய தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்திற்காக பின்வரும் சாதனங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஆள் அடையாள அட்டையொன்று ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டொன்று.

15. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திணைக்களத் தலைவர்கள் கடமை லீவு அளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

16. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது மிக கவனமாகவும் சரியாகவும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என அறியவருமிடத்து பரீட்சைக்கு முன்னராகவோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னராகவோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியினால் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்மையற்றவையென தெரியவருமிடத்து அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

17. **பரீட்சை திட்டம்**.- பரீட்சைக்கான பாடங்களும் ஒவ்வொரு பாடங்களுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன :

| | பாடம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (i) | பொது அறிவு | 100 | 2 மணித்தியாலங்கள் |
| (ii) | உளச்சார்பு பரீட்சை | 100 | 1 மணித்தியாலம் |
| | மொத்தம் | 200 | |

பொது அறிவு (காலம் : 2 மணித்தியாலங்கள்) :

(i) சமூக, கலாசார, அரசியல் மற்றும் விஞ்ஞான விடயங்கள் தொடர்பான அறிவைப் பரீட்சித்தல் ;

(ii) உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் சமகால நிகழ்வுகள் தொடர்பான அறிவைப் பரீட்சித்தல் ;

(iii) அரசாங்க அலுவலகமொன்றில் பயன்படுத்தப்படும் இலகுவான அலுவலக முறைகள், நாளேடு, விடயக்கோவை பதிவேடு, பணவுறுதி (வவுச்சர்), அசைவுப் பத்திரங்கள், வரவு இடாப்பு, தின முத்திரை மற்றும் பெயர் முத்திரை, தபால் பைகள் ஆகிய அலுவலக உபகரணங்களும் அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்துதல் தொடர்பான பரீட்சார்த்தியின் பொது அறிவையும் கிரகித்தலையும் பரீட்சித்தில் ;

(iv) அரசாங்க நிறுவனங்களில் பேணிச்செல்லப்படும் சிறந்த தொடர்பாடல் முறைகள், சிறந்த முறையில் அலுவலகத்தையும் அதன் சூழலையும் பேணிச் செல்லுதல் மற்றும் சிறந்த முறையில் பொதுசன தொடர்பை பேணிச்செல்லுதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக பரீட்சார்த்தியின் கிரகித்தலையும் உளப்பாங்கையும் பரீட்சித்தல்.

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும் :

பகுதி I - சுருக்கமான பதில்கள், உத்தேச வினாக்கள் 40 (40 நிமிடங்கள் - 40 புள்ளிகள்)

பகுதி II - ஒரு நிகழ்வு, கூற்று அல்லது பந்தி ஆகியவற்றிலிருந்து கேட்கப்படும் சுருக்கமான பதில்கள் உத்தேச வினாக்கள் 10 மற்றும் பகுதிக் கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 (80 நிமிடங்கள் - 60 புள்ளிகள்)

உளச்சார்புப் பரீட்சை : (காலம் : 1 மணித்தியாலம்)

(i) எண்கள், இலகுவான கணித வினாக்களை தீர்க்கும் ஆற்றல், வழங்கியுள்ள தகவல்களின்படி வரைவுகள்/ அட்டவணைகள் என்பவற்றைத் தயாரித்தல் ;

(ii) பொது அறிவு மற்றும் தர்க்க ரீதியான ஆற்றல் ஆகியவற்றை அளவிடும் வினாக்கள் ;

(iii) பரீட்சார்த்தியின் கருத்துகளை வெளிப்படுத்தும் ஆற்றல், கிரகித்துக்கொள்ளும் திறன், பல வாக்கியங்களின் கருத்துக்களை ஒரு வாக்கியத்தால் எழுதுதல், எழுத்துப் பிழைகள், நிறுத்தக் குறியீடுகளின் பயன்பாட்டை பரீட்சித்தல், சரியான இலக்கணப் பயன்பாடு மற்றும் சொற்கள் தொடர்பான அறிவு ;

(iv) வழங்கியுள்ள தகவல்களின்படி இலகுவான கடிதமொன்றை வரையுள்படுத்துதல், குறிப்பொன்றை எழுதுதல், சுருக்கமான அறிக்கையொன்றை எழுதுதல், அழைப்பொன்றை தயாரித்தல், நிகழ்ச்சி நிரலொன்றை தயாரித்தல் தொடர்பான அறிவு.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும் :

பகுதி I - 20 பல்தேர்வு வினாக்கள் (20 புள்ளிகள், 15 நிமிடங்கள்)
பகுதி II - கட்டுரை முறையிலான 03 வினாக்கள் (80 புள்ளிகள், 45 நிமிடங்கள்.)

**குறிப்பு**.- (i) சேவையின் கடமைகளுக்காக பரீட்சார்த்தியொருவரின் தகவுத்திறன் மற்றும் ஆற்றல் ஆகியவற்றை பரீட்சிக்கும் வகையில் இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ii) ஒவ்வொரு எழுத்திலான விடைத்தாளிலும் தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப் பிழைகள் என்பவற்றிற்காக புள்ளிகள் கழிக்கப்படும்.

18. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2010, ஏப்பிறல் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2009**

Limited Competitive Examination for Promotion of Minor Employees of the Public Service to Class III of the Public Management Assistants' Service – 2009

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1 | |
| 2 | |

வர்த்தமானி அறிவித்தலின்படி நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரத்தைக் குறிப்பிடவும்.) இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

1.0 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) உதா.: SILVA, A.B.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.0 சேவை நிலையமும் முகவரியும் :-----.

2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : -----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : -----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 பிரவேச அட்டை அனுப்பவேண்டிய முகவரி : -----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

3.0 3.1 பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.2 தேசிய அடையாள அட்டை இல.:
☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 சேவை விபரங்கள் :-

4.1 நீங்கள் தற்போது சேவையாற்றும் திணைக்களத்தின் பெயர் : -----.

4.2 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் :----.

4.3 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

4.4 தற்போதைய பதவி நிரந்தரமானதா ? தற்காலிகமானதா : ----.

4.5 தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா :----.

4.6 உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், உறுதிப்படுத்தப்படுவதற்கு நீங்கள் தகைமையடைந்த திகதி :----.

4.7 தற்போதைய பதவியில் நீங்கள் உறுதிப்படுத்தப்பட்டது தொடர்பான கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

4.8 தற்போதைய ஆண்டு வேதனம் (திரட்டிய) :----.

4.9 தற்போதைய பதவி இளைப்பாற்றுச் சம்பளம் உரித்துடையதா ? :----.

5.0 பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :----.

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இவ்விடத்தில் ஒட்டிவிடவும்.)

இதில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையென அத்தாட்சிப்படுத்துகின்றேன். இத்துடன் தரப்பட்டுள்ள விபரங்களில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனக் காணப்பட்டால், அச்செம்மையின்மை நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் நியமிக்கப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன். மேலும்

பரீட்சை நடாத்தல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்
(திணைக்களத் தலைவரின் முன்னிலையில்
கையொப்பம் இடப்படல் வேண்டும்.)

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்காக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப் படுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

எனது அலுவலகத்தின் அலுவலரான திரு./ திருமதி/ செல்வி ..................................... ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ............................... இன்றைய திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(1) திரு./திருமதி/செல்வி ...................... இத்திணைக்களத்தில் பணியாற்றுபவரெனவும் ;

(2) அவர் நிரந்தரமான பதவியொன்றினை வகிக்கின்றா ரெனவும் ;

(3) 2009.12.31 ஆந் திகதியன்று அவர் நிரந்தரமான பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளாரெனவும் ;

(4) நிரந்தரப் பதவியொன்றில் இவரை உறுதிப்படுத்தும் கடிதம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும் ;

(5) அவர் 2009.12.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையினை பூர்த்திசெய்துள்ளாரெனவும் ;

(6) அவர் குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 8.0 பந்தியில் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அடங்கும் வேதனத்தைப் பெறுகின்றாரெனவும் அல்லது வேதன திட்டத்தில் உள்ளாரெனவும் ;

(7) 2009.12.31 ஆந் திகதிக்கு உடன் முன்னரான 5 ஆண்டு காலத்தில் அவரது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமாக இருந்ததெனவும் ;

(8) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நியமிக்கப்படுவதற்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரின் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும் ;

(9) ரூபா 250 பெறுமதியான ஒரு பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;

(10) அவரது விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்தில் உள்ள பதிவுகளுடன் செவ்வை பார்க்கப்பட்டுள்ளனவெனவும் இப்பரீட்சை சம்பந்தமான வர்த்தமானி அறிவிப்பில் காணப்படும் ஒழுங்குவிதிகளுக் கிணங்க இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை உடையவர் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**குறிப்பு**.- (i) இச்சான்றிதழில், திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட முறையாக அதிகாரம்பெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மட்டுமே கையொப்பமிடுதல் வேண்டும். சான்றிதழை அளிக்கும் உத்தியோகத்தர் சான்றிதழில் தரப்பட்டுள்ள விபரங்கள் எல்லாவகையிலும் சரியானவையெனத் திருப்தியடைதல் வேண்டும்.

(ii) தகைமைகள் பற்றிய எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்யாத எப்பரீட்சார்த்தியினதும் விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படலாகாது.

5-316

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.